# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்

(சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்)



## "பிண்ட அண்ட ஒளிகள் & பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்" விளக்கம்



### பகுதி 2 - 10/11/2024

வழங்குபவர்

### திரு. லோக. ஆனந்த பாரதி

# பிண்ட அண்ட ஒளிகள்

- ✓ இக்குறிப்பு, ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளை அவர்களின் பதிப்பில் திருவார்த்தைச் சிறு குறிப்புக்களில் 110-வது குறிப்பாக ஒளி என்னும் தலைப்பிலும்,
- ✓ ஊரன் அடிகளார் பதிப்பில், பிண்ட அண்ட ஒளிகள் என்னும் தலைப்பில் இரண்டாவது குறிப்பாகவும் அமைந்துள்ளது.
- ✓ அண்டத்தில் உள்ள நான்கு ஒளிகளை, நமது பிண்டத்தில் உள்ள நான்கு ஒளிகளோடும் ஒப்பிடுவதாக இச்சிறு குறிப்பு அமைந்துள்ளது.

| பிண்ட ஒளி | அண்ட ஒளி |
| --- | --- |
| ஆன்ம ஒளி | அக்கினி ஒளி |
| ஜீவ ஒளி | சூரிய ஒளி |
| மன ஒளி | சந்திர ஒளி |
| கண்ணொளி | நட்சத்திர ஒளி |

# பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்

- ✓ இக்குறிப்பு, ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளை அவர்களின் பதிப்பில் திருவார்த்தைக் குறிப்புக்களில் 57-வது குறிப்பாக "பிரமாண்ட பகிரண்ட வியாபக சந்திராதித்ய கிரகண பரிச லக்ஷண விவரம்" என்னும் தலைப்பிலும்,

- ✓ ஊரன் அடிகளார் பதிப்பில், பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம் என்னும் தலைப்பில் 3- வது குறிப்பாகவும் அமைந்துள்ளது.

அண்டத்தில் சந்திர, சூரிய கிரகணங்கள் தோன்றுவது போல, பிண்டத்திலும் கரண, ஜீவனுக்கு கிரகணங்கள் (மறைப்புகள்) நிகழ்கின்றன, அவைகளின் விவரம் என்ன? அவைகளை எப்படி நாம் அறிந்து நம்மளவில் நிவர்த்தித்துக் கொள்வது?, என்பதைப் பற்றிய விவகாரக் குறிப்புகள் இந்தலைப்பின் கீழ் உள்ளன.

# பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்

இவ்வுலகமும் இவ்வுலகத்திலுள்ள சராசர பேதங்களில் முக்கியமாயுள்ள சரமாகிய ஜீவராசிகளும் கற்பபேதமும் தோன்றி உய்யும் பொருட்டு, அநேகவித வாயுபேதங்கள் அநாதியில் கடவுளால் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை,

அமுதக்காற்றும்,

விஷக்காற்றும்.

(அவை) விசேஷ வியாபகமா யிருந்துகொண்டிருக்கின்றன.

---

சரம்- அசையும் பொருள், அசரம்- அசையாத பொருள்,
அநேக விதம்- பல வகை, அனாதியில்- முன்னொரு காலத்தில்,
வியாபகம்- எங்கும் நிறைந்து, பேதங்கள் – வேறுபாடுகள்,
கற்பபேதம் – காலம்.

# பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்

இவற்றில் அமுதக்காற்று பிரமாண்ட பகிரண்ட கடாகத்தில் விசேஷ வியாபகமாயும், இம் மகா அண்டத்திலும், பிண்ட ஜீவரிடத்திலும் ஏகதேச வியாபகமாயும் இருக்கின்றது.

விஷக்காற்று மேற்படி பிரமாண்டாதி கடாகத்தில் - ஏகதேசம் நிமிஷகாலம் அல்லது முகூர்த்தம், அசாதாரணத்தில் ஜாமம் வரையில் – வியாபகமாயும். இம்மகா அண்டாதி ஜீவராசிகளிடத்தில் விசேஷ வியாபகமாயும் இருந்து கொண்டிருக்கிறது.

பிரமாண்டாதிகளில், அமுதக்காற்று விசேஷ வியாபகமாயுள்ளதால், அவ்வண்டங்களிலுள்ள சூரிய சந்திர உடுக்கள் முதலியவைகளும் சொற்பகாலத்தில் அழிவடைதலின்றி இருக்கின்றன.

விஷக்காற்று ஏகதேச வியாபகமாதலால் (உம்), கற்பகாலத்தில் வியாப்பியமாயும், வியாபகமாயும் இருத்தலால் (உம்), அந்தக்காலங்களில் (அவை) நஷ்டப்படுகின்றன.

---

கடாகம்- அண்ட கோளம், உடுக்காள்- நட்சத்திரம், வியாப்பியம்- அடங்கி/ விளக்கமின்றி

# பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்

மேற்படி விஷக்காற்று கருமை வண்ணமாயும், செம்மை வண்ணமாயும் இரண்டு பாகமாய்ப் பிரியும். இவைகளை இராகு கேதுக்களென வழங்குகின்றனர்.

இது ஒரு முகூர்த்தம் ஒரு ஜாமம்...

அதற்குமேல் இவ்வண்ணமாய், இவ்வண்ட கணிதப்படி, அவ்வண்டங்களிற் கணித காலத்தில் வியாபகமா யிருப்பதுதான் சந்திராதித்த கிரஹண தோஷ காலம்.

தோஷகாலமென்பது பிரகாசமின்றி இருள் வண்ணமாய்ச் சிலகாலத்தில் முற்றும் மறைந்தும் சிலகாலத்தில் ஏகதேசம் மறைந்தும் இருப்பதால்,

இவ்வண்ட புருஷனுக்குக் கரணஸ்தானமாகிய சந்திரனும் ஜீவஸ்தானமாகிய சூரியனும் பிரகாசம் மழுங்குகின்றபடியால் தோஷமெனப் பெயர்.

மேலும் தோஷம் என்பது இருள், அறியாமை, அஞ்ஞானம். விஷக்காற்று வியாபகமாயுள்ளது இவ்வண்டத்திலும் ஜீவர்களிடத்திலும் ஆதலால், ஜீவகோடிராசிகள் சொற்பத்தில் அடிக்கடி நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

---

... இங்கு கருத்துத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும். (ஆ. பா)

# பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்

அமுதக்காற்று இவ்வண்டத்தில் இரவில் அருணோதயந் தொடங்கி உதயபரியந்தம் வியாபகமாய் இருக்கின்றது.

அக்காலத்தில் ஜீவர்கள் நன்முயற்சியி லிருப்பது விசேஷ நலம்.

தேகாதி பிண்டத்தில் மேற்படி அமுதக்காற்று வியாப்பியமாயிருக்கும்.

ஒருகால் ஒரு க்ஷண நேரம் அந்தக்காற்று வியாபகமாயிருக்குங்கால், ஜீவர்களுக்கு இது வரையில் தாங்களறியாததான கடவுள்விளக்கம் உண்டாகும்.

மேற்படி காற்று வியாபகம் ஏகதேசமுமில்லாவிடில் ஜீவர்கள் விஷக்காற்றினால் சதா வியாபகமடைதலில், இந்தச் சொற்ப ஜீவிப்பும் விருத்திக்கு வரமாட்டாது.

அமுதக்காற்று வியாப்பியமன்றி வியாபகமாயிருக்குங் காலத்தில், ஜீவர்களுக்கு அறிவுவிளக்கம், மனநெகிழ்ச்சி, இந்திரிய அடக்கம், ஈசுரபத்தி முதலியவும் விளங்கும். அக்காலத்தை அமுதக் காற்றின் வியாபக காலமென்று அறியவேண்டும்.

இதன்றி இருண்மயமாய் முன் பின் தோன்றாது அறிவின்றி யிருக்குங்காலம் விஷக்காற்று வியாபகமாயிருக்குங் காலமென் றறிய வேண்டும்.

# பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்

அண்டத்தில் சந்திராதித்த கிரஹண தோஷம்போல் இப்பிண்டத்தில் கிரஹண தோஷம் யாதெனில்:-

பிண்ட புருஷனுக்குப் புறமாகிய கரணமென்றும் சந்திரனாகிய தோற்றும் அறிவு, இரும்பில் துரிசு ஏறுவதுபோல், விஷயவாசனையி லழுந்தி ஏகதேசப் பிரகாச விளக்கமுடையதுதான் சந்திரகிரஹணம். இஃதறியாமை.

சூரிய கிரஹணமென்பது: அகப்புறமாகிய ஜீவனென்னும் சூரியனாகிய தோற்றுவிக்கும் அறிவு, செம்பிற் களிம்பேறுவதுபோல், விஷயவாசனை மயமாய் யாதுந் தோன்றாது அறிவின்றி நிற்குங்காலம் சூரியகிரஹணம்.

---

தோற்றுவிக்கும் அறிவு - ஆதார அறிவு (காரண)அறிவு
தோற்றும் அறிவு - வெளிப்பட்ட அறிவு (காரிய அறிவு)
இரும்பில் துரிசு- வெளியில் இருந்து வரும் அழுக்கு,
செம்பில் களிம்பு- உள்ளேயே உள்ள அழுக்கு

# பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்

இஃது மாயாசிருட்டிக்கு இயற்கையானாலும், இரும்பையும் தாமிரத்தையும் பரிசனாதி வேதிகளால் ரவுப்பியாதி ஏமங்கள் செய்வது போல்,

நன்முயற்சியாகிய சீவகாருண்ய மயமாய்ப் பரிச்சியஞ் செய்தால் மேற்படி துரிசு நீங்கும்.

மேலும் ஆசாரியர் அனுக்கிரகத்தாலும் நீங்கும்.

இது பிண்டாண்ட கிரஹண சித்தாந்தம்.

---

துரிசு- குற்றம், ரவுப்பியம்- வெள்ளி, ஏமம்- தங்கம், பரிச்சயம்- பழகுதல், ஆசாரியன் - குருநாதர், பரிசனாதி வேதி - இரசவாதப் பொருள்.

# துணை நூல்கள்

- ✓ திருஅருட்பா ஆறு திருமுறைகள்
- ✓ உபதேசப் பகுதி - பாலகிருஷ்ணன் பிள்ளை பதிப்பு - நான்காம் புத்தகம்.
- ✓ திருஅருட்பா உரைநடை - ஊரன் அடிகள் பதிப்பு.
- ✓ திருஅருட்பா - ச.மு.கந்தசாமிப் பிள்ளை பதிப்பு.
- ✓ திருஅருட்பா உரைநடை - தெய்வ நிலையப் பதிப்பு.
- ✓ முனைவர் வை நமசிவாயம் – முனைவர் இராம. பாண்டுரங்கன் உரைநடை விளக்கம், வள்ளலார் கல்விப் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம். வடலூர்.

# “பிண்ட அண்ட ஒளிகள் & பிண்டாண்ட கிரகண சித்தாந்தம்”

## ஐயம் தெளிதல்...



# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்

(சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்)

## “பிண்ட அண்ட ஒளிகள் & பிண்ட அண்ட கிரகண சித்தாந்தம்” விளக்கம்



பகுதி 2 - 10/11/2024

வழங்குபவர்

திரு. லோக. ஆனந்த பாரதி